செய்தி வெளியீடு எண்: 922        நாள்: 29.10.2008

<u>அரசு செய்திக்குறிப்பு</u>

2008–09 ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு மற்றும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் வட்டாரவள மைய மேற்பார்வையாளர் பணியிடங்களில் பதவி உயர்வு, முதுகலை ஆசிரியர்களை கொண்டு வட்டாரவள மைய மேற்பார்வையாளர் பணியிடங்களில் மாறுதல் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு ஆகியவற்றிற்கான கலந்தாய்வுக் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

| நாள் | இடம் | விவரம் |
|---|---|---|
| 01.11.2008 சனிக்கிழமை காலை 10 .00 மணி | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அசோக் நகர், சென்னை – 83 | அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு முன்னுரிமைப் பட்டியல் வ.எண்.1 முதல் 350 முடிய இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர் பணியிலிருந்து, வட்டாரவள மைய மேற்பார்வையாளர் பணிக்கு மாறுதல். |
| 02.11.2008 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அசோக் நகர், சென்னை – 83 | அரசு உயர்நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் பதவி உயர்வு முன்னுரிமைப் பட்டியல் வ.எண்.351 முதல் 641 முடிய இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர் பணியிலிருந்து, வட்டார வளமைய மேற்பார்வையாளர் பணிக்கு மாறுதல் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு முன்னுரிமைப் பட்டியலில் உள்ள அனைவரும். |

பள்ளிக் கல்வி இயக்குநர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9